1993 அக்டோபர் 28]

43—

இலவச வீட்டுமனைப்பட்டா, நிலப்பட்டா வழங்குவதில் பெண்களுக்கு முன்னுரிமை.

*17010— திரு. தேனி. வெ. பன்னீர்செல்வம் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு, தகுதி உள்ளவர்களுக்கு இலவசவீட்டுமனைப் பட்டா, நிலப்பட்டா அளிக்கப்படும்பொழுது பெண்களுக்கென்று முன்னுரிமை அளிக்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், என்ன விதிமுறை பின்பற்றப்படுகிறது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தகுதியுள்ளவர்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டா, நிலப்பட்டா வழங்கப்படும்பொழுது பெண்களுக்கென்று முன்னுரிமை எதுவும் அளிக்கப்படுவதில்லை. ஆனால் பட்டாக்கள் குடும்பத்திலுள்ள மனைவி/பெண்கள் பெயரிலேயே வழங்கப்படுகிறது.

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சிக் காலத்திலே கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், ஆதரவற்ற பெண்கள், விதவைகள் கிராமப் பகுதியிலே கணவனை இழந்தும் அவர்களுக்கு வீடு இல்லாத நிலைமை பொதுவாக இருக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கும்போது முன்னுரிமை கொடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே சொல்லுகிற போது கைம்பெண்கள் அல்லாத பெண்களுக்குக்கூட கணவன் இருந்தால் கூட, தகுதி உடையவர்களுக்குப் பட்டா கொடுக்கிறபோது பெண்களுக்குத்தான் முன்னுரிமை கொடுக்கப் படுகிறது என்று சொன்னேன். எனவே ஆதரவற்ற பெண்கள், கைம்பெண்கள் ஆகியோருக்கு முன்னுரிமை கொடுத்து பட்டாக் கொடுப்பதற்கு அரசு கவனித்து ஏற்பாடுகளைச் செய்யும்.

[1993 அக்டோபர் 28

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் பெண்கள் வீட்டிலே குடியிருந்து வீட்டை முழுமையாகப் பாதுகாக்கின்ற பொறுப்பு அவர்களிடத்திலேதான் இருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதிர்காலத்தில் குடியிருப்பதற்கு வீட்டுமனைப் பட்டாவை அரசு சார்பாக வழங்குகின்ற போது முன்னுரிமை அளித்து பெண்களுக்குத்தான் வீட்டு மனைப் பட்டா தரப்படும் என்று உத்தரவாதத்தை அறிவிப்பார்களா? அதோடு 10 வருடம், 15 வருடங்கள் தொடர்ந்து குடியிருந்து வருகின்ற ஓடைப் புறம்போக்கு, பல்வாரி, வாரிப் புறம்போக்கு போன்ற பகுதிகளில் குடியிருப்பதற்கு ஊராட்சி மன்றத்தின் சார்பாக வீதி விளக்குகள் போட்டுத் தந்திருக்கின்றார்கள். ஆழ்துளைக் கிணறுகள் அமை கப்பட்டிருக்கின்றன. ஆகவே, தண்ணீர் வராத அளவு நல்ல சமப்படுத்தப் பட்ட பகுதி இருக்கின்ற சில இடங்களில் பட்டாக் கள் கொடுப்பதிலே காலதாமதம் ஏற்படுகின்ற காரணத்தினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவரை நேரடியாகப் பார்த்து, அது குடியிருப்பதற்கு ஏற்ற இடம்தான் என்று அவர் முடிவு செய்வாரேயானால் அந்த இடத்திற்குப் பட்டா கொடுக்கின்ற அதிகாரத்தை அவருக்குத்தர வேண்டிய நடவடிக்கையை எடுப்பாரா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே குறிப்பிடுகிறபோதுகூட, பெண்களுக்குத்தான் முன்னுரிமை கொடுத்து வருகிறோம் என்று தெரிவித்து விட்டேன், அடுத்து அவர் கேட்ட இரண்டாவது கேள்வி, ஆக்கிரமிப்புச் செய்திருக்கின்றவர்களுக் குப் பட்டாக் கொடுப்பது பற்றி, புறம்போக்கு என்று சொல்லும் போது, வாரிப் புறம்போக்கு, குட்டைப் புறம்போக்கு, ஏரிப் புறம்போக்கு என்றெல்லாம் இருக்கின்றன. வறட்சிக் காலங் களில் நிலத்தடி தண்ணீர் வேண்டும் என்பதற்காக ஒரு பக்கம் அரசு செலவு செய்து, குட்டைகளை அமைக்கிறது. ஆனால் ஒரு பக்கம் ஏரிகளிலே ஆக்கிரமிப்பு இருக்கிறது. மழைக் காலங் களில் ஏரிகளிலே தண்ணீர் வந்து தானாகப் பெருகும். அப்படிப் பட்ட நல்ல அமைப்பு இருக்கிறது. அப்படி இருக்கும்போது அந்த இடங்களில் பட்டா போட்டுக் கொடுத்து விட்டு, பிறகு அரசு செலவிலே குட்டைகளை வெட்டுகிறபோது அது இரட்டிப் புச் செலவு ஆகிவிடுகிறது. அதோடு மட்டுமல்ல, வெட்டுகின்ற குட்டையில் தண்ணீர் அதிகமாக வராது. ஆகவே, இதில்தனிப் பட்டவர்களின் நலன் முக்கியமா அல்லது சமுதாயத்தின் நலன் முக்கியமா என்று பார்த்தால் சமுதாயத்திற்குத்தான் முதலிடம். இரண்டாவது இடம் தனிப்பட்டவர்களுக்கு.

1993 அக்டோபர் 28]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் வெ. சரோஜா.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் போது ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகளை மட்டும் பெற்றுக்கொண்டு நிரந்தர அறுவை சிகிச்சை முறையை பின் பற்றும் தாய்மார்களுக்கு முன்னுரிமை கொடுக்கும்போது, குடும்ப நலத் திட்டத்தை செவ்வனே செயல்படுத்தும் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பெண் குழந்தைகள் பாதுகாப்புச் சட்டத்தையும் செவ்வனே நிர்வகிக்கும் வண்ணம் இனி வருங்காலங்களில் இந்தப் பெண்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இனிவருங்காலங்களில் என்பதைவிட நடப்புக் காலத்திலேயே அதைத்தான் செய்து கொண்டு வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பி. சி. புறம்போக்கு என்று சொல்லப்படுகிற தரிசு புறம்போக்குகளை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டுமே வழங்கவேண்டும் என்கிற சட்டம் இருக்கிறது. ஆனால், அதைப் பல ஆக்கிரமிப்பாளர்கள் ஆக்கிரமம் செய்து, முறைகேடாக கைப்பற்றியிருக்கிறார்கள். அதை மீண்டும் கைப்பற்றி தாழ்த்தப்பட்ட மக்களுக்கே வழங்குவதற்கு அரசு வேகமான நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு வேகமான நடவடிக்கை எடுக்கும், எடுத்துக்கொண்டு வருகிறது. அப்படி ஆக்கிரமிப்பாளர்கள் என்கிறபோது, அந்த வார்த்தை வருகிறபோதே ஆக்கிரமிப்பு செய்கிறவர்கள், வலுவுள்ளவர்கள்தான் ஆக்கிரமிப்பு செய்கிறார்கள் என்று பொருள் கொள்ள வேண்டும். அரசு செய்கிற காரியத்திற்கு பொது மக்களும், குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர்களும் தகவல்களைக் கொடுத்தால், அதை இன்னும் விரைவாகச் செய்வதற்கு நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கா. பூ. முனுசாமி.

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு 5ஆம் வகுப்பு வரை பாடம் கற்பிக்கின்றவர்கள் பெண்களாகத்தான் இருக்க வேண்டுமென்ற சட்டத்தை இயற்றியிருக்கிறார்கள். அதேபோல சத்துணவு அமைப்பாளர்களாக பெண்களைத்தான் நியமிக்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதையொட்டி எதிர்காலங்களில் இதுபோன்ற இலவசமனைப் பட்டாக்கள் கொடுக்கின்றபோது குடும்பத் தலைவருக்குக் கொடுக்காமல், குடும்பத் தலைவிக்குக் கொடுக்கக்கூடிய நிலையில் சட்டத்தை திருத்தம் செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்காலத்திலே இல்லை, நடப்புக் காலத்திலே பெண்களுக்குத்தான் பட்டா கொடுத்துக்கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது ஏழை, அதுவும் பெண்களுக்குப் பட்டா கொடுக்கின்றபோது நத்தம் புறம்போக்கில்தான் பட்டா கொடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். இப்பொழுது நிறைய கிராமங்களில் மந்தைப் புறம்போக்கு, பள்ளவாரிப் புறம்போக்குகளில் எல்லாம் ஆங்காங்கே குடிசைகளை அமைத்துக்கொண்டு ஆண்டாண்டுக் காலமாக குடியிருந்து வருகிறார்கள். அந்த மந்தைப் புறம்போக்கு, பள்ளவாரி புறம்போக்கிலிருந்து அந்த இனத்திலிருந்து மாற்றி, நத்தமாகக் கொண்டுவந்து அதற்குப் பிறகுதான் பட்டா தருகிறீர்கள். ஆகவே, காலக்கெடு, கீழிலிருந்து மேலே வருகின்ற வரைக்கும் சுமார் 10, 15 ஆண்டுகள் ஆகிவிடுகின்றது. ஆகவே, 10 15 ஆண்டுகள் மந்தைப் புறம்போக்கு, பள்ளவாரி புறம்போக்கில் இருப்பவர்களுக்கும், நத்தமாக மாற்றாமல் அதே இனத்தில் பட்டா வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. ராஜு அவர்கள் கேட்ட கேள்வி எனக்கு பூராவும் விளங்கிக்கொள்ள முடியவில்லை,

1993 அக்டோபர் 28]

இருந்தாலும் இப்பொழுது ஆக்கிரமிப்பு செய்பவர்களின் கணக்கைப் பார்த்தால் 8,59,778 ஏக்கர் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கிறது. அப்படி ஆக்கிரமிப்பு செய்திருப்பவர்களுடைய எண்ணிக்கையைப் பார்த்தால் ஆக்கிரமிப்பு செய்தவர்கள் 12,57,000 பேர்கள் அப்படி ஆக்கிரமிப்பு செய்த இடங்களிலே ஆட்சேபணை இல்லாத இடங்கள் எவ்வளவு என்றால் 2,63,044, அதாவது 6,50,000 ஏக்கர்தான் இருக்கிறது. ஆக்கிரமிப்பு என்கிறபோதே வசதி படைத்தவர்கள்தான் அங்கே ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். நாம் கணக்கு பார்க்கிறபோது, மாவட்ட வாரியாக ஊர் வாரியாக ஆக்கிரமிப்பு யார் யார் செய்திருக்கிறார்கள், எல்லா பெயர்களும் என்னிடத்திலே இருக்கிறது. அவ்வளவும் நான் உங்களிடத்திலே படிக்கத் தேவையில்லையென்று நினைக்கிறேன். ஒன்றிரண்டு உங்களுக்குச் சொல்ல வேண்டுமானால் சொல்கிறேன். கோயம்புத்தூர் மாவட்டத்தைப் பற்றி வேண்டுமானால் சொல்கிறேன். எந்த மாவட்டம் வேண்டுமானாலும் சொல்கிறேன். நீங்கள் கோயம்புத்தூர் மாவட்டம்தானே? (சிரிப்பு) கோயம்புத்தூர் மாவட்டத்திலே சொல்லவேண்டுமானால் ஒன்றைச் சொல்கிறேன். திருமதி கே. செல்வமதி. அவர்கள் நல்ல வசதி படைத்தவர்கள். அவர்கள் 2 ஏக்கர் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். திரு. கே. வி. சுப்பிரமணியம் நல்ல வசதி படைத்தவர். அவர் ஒன்றே முக்கால் ஏக்கர் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார். திரு. தங்கவேலு கவுண்டர் அவர்கள் ஒன்றே முக்கால் ஏக்கர் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார். திரு. பாலுசாமி ஒரு ஏக்கர் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார். அவருக்கு 7 ஏக்கர் நிலம் இருக்கிறது. இப்படியே கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், நல்ல வசதி படைத்தவர்கள் எல்லாம் கூட ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். ஆகவே, இதை எல்லாம் பார்த்துத்தான் கொடுக்க வேண்டியிருக்கிறது.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி பெண்களுக்கு முன்னுரிமை கொடுப்பது பற்றியது. அதனால் ஆண் சட்டமன்ற உறுப்பினர்கள் சற்று பொறுத்துக்கொள்ள வேண்டும். திருமதி பழனியம்மாள்.

திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறபோது பணக்காரர்கள், வசதி படைத்தவர்கள் ஆக்கிரமிப்பு செய்வதைத் தடுத்து விடாலம் என்று கூறினார்கள். அதேநேரத்தில் கிராமப்புறங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் புறம்போக்கு நிலங்களில் 20 ஆண்டு, 30 ஆண்டு, 40 ஆண்டு காலமாக வீடு கட்டி வாழ்ந்து வருகிறார்கள். அதைப்

போல மந்தைப் புறம்போக்கு நிலங்களில் வீடு கட்டி வாழ்ந்து வருகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்குக்கூட இன்னும் பட்டா வழங்கப்படாமல் இருப்பதால் அவர்கள் அரசாங்கச் சலுகைகளைப் பெறமுடியாமல் இருக்கிறார்கள். ஐ. ஆர். டி. பி. கடன் வேண்டுமென்றால் கூட வீடு இருந்தால்தான் பெற முடியும். பல கிராமங்களில் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. ஆகவே, 30, 40 ஆண்டுகாலம் மந்தைப் புறம்போக்கு, குட்டைப் புறம் போக்கு நிலங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, கட்டாயமாக பட்டா வழங்க அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்</u> : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 9 மாதங்களில் மட்டுமே தமிழ்நாடு பூராவும் 89,000 பேர்களுக்கு பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல. எல்லா இடங்களிலும் நிலம் இல்லாத ஆதி திராவிடர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. மந்தைப் புறம்போக்கு என்று சொல்லுகிறபோது அது வாயில்லாத ஜீவனுக்காக இருப்பது அதைக் கொடுப்பதற்கு கொஞ்சம் தயக்கமாக இருக்கிறது. மற்ற புறம்போக்கு என்று சொல்லுகிறபோது ஆட்சேபணை இல்லாத இடங்களில் பட்டா கொடுப்பதற்கு நாங்கள் எல்லாவிதமான முயற்சிகளையும் எடுக்கிறோம். மேலும், சட்டமன்ற உறுப்பினர்கள் எந்த எந்த இடத்தில் யார் யார் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார். அவருக்கு உடனே பட்டா கொடுக்கலாம் என்று எழுதிக்கொடுத்தால் அதற்கு முன்னுரிமை கொடுக்கலாம். நீங்கள் எல்லாம் ஊருக்குப் போகிறபோது, கிராமங்களுக்குச் சென்று ஏழை மக்கள், நிலம் இல்லாதவர்கள் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள் என்று எழுதிக் கொடுத்தால் அதைத் தனியாகக் கவனித்து, ஸ்பெஷல் டிரைவ் செய்து அதற்கு முன்னுரிமை கொடுக்கலாம். சேலம் மாவட்டத்திலே கூட நிறைய பேர் வசதி படைத்தவர்கள் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். சத்தியா என்பவர் ஒருவர். அவருக்கு 69 ஏக்கர் இருக்கிறது. அவர் 32 ஏக்கர் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார். அதைப்போல திரு. என். எஸ். இராஜன். அவருக்கு 803 ஏக்கர் இருக்கிறது; அவர் 254 ஏக்கர் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார். இதைப்போன்று நிறையச் சொல்லலாம். நாங்கள் என்ன செய்வது இதை எல்லாம் பார்த்துதான் செய்ய வேண்டியிருக்கிறது.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : இறுதியாக திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

<u>திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :</u> துணைத் தலைவர் அவர்களே, வீட்டு மனை இல்லாதவர்களுக்கு புறம்போக்கு இடம் அல்லது தரிசு நிலம் இல்லாத இடங்களில், புஞ்சைக்காடு

இல்லாத இடங்களில் நஞ்சை நிலத்தை எடுத்து வீட்டு மனை கொடுக்கிறோம். அப்படி கொடுக்கும்போது அவர்கள் 2, 3 ஆண்டுகள் வீடு கட்டாமலேயே விட்டுவிடுகிறார்கள். வீடு கட்டாமல் அப்படியே போட்டுவிட்டு சிறிது காலத்திற்குப் பிறகு அதை இன்னொருவருக்கு விற்றுவிடுகிறார்கள். அதனால் இப்படிப்பட்ட சம்பவங்கள் அரசினுடைய கவனத்திற்கு வந்தால், யாருக்குப் பட்டா கொடுக்கப் பட்டதோ, அவர் யாருக்கு விற்றாரோ அந்த இருவருக்கும் சேர்த்து ஏதாவது சிறிய தண்டனையேனும் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.25

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இலவசமாகக் கொடுக்கிற வீட்டுமனைப் பட்டாவானாலும் சரி, நிலப்பட்டாவானாலும் சரி, அவர்களுடைய தகுதியின் அடிப்படையில் கொடுக்கப்படுகின்றது. எனவே அதை விற்றால் செல்லாது. அதை விற்றவர்கள் பணத்தை வாங்கிக் கொண்டாலும், அதை யார் வாங்கிக் கொண்டார்களோ அவர்கள் அதை அனுபவிக்க முடியாது. அது அரசினுடைய கவனத்திற்கு வந்தால் அதை நாம் கேன்சல் செய்து விடுகிறோம். அதனை ரத்து செய்துகொண்டிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 44, திரு. எஸ். ஆசைமணி, இருக்கையில் இல்லை.

வினா எண் 45, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், உறுப்பினர் இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. எச் எம். ராஜு கேட்கிறார்.

45—

பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகளை முழுநேரம் இயக்க நடவடிக்கை.

*11310—திரு. ப. ரங்கநாதன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—